

எண்ணம் பயத்தையும்,
இன்பத்தையும்
உருவாக்குகிறது.


வசந்த இதழ்

Vasanta Ethal

KRISHNAMURTI FOUNDATION INDIA FEBRUARY 2010 - MAY 2010 Rs.2/- VOL. V ISSUE 1


# நம்பிக்கையின் மூலம் உண்மையை அறிய முடியாது

கேள்வி : சுலபமாக மறுத்து விடக் கூடிய விஷயமாகக் கடவுள் இல்லை. கடவுள் என்ற கருத்தினையே நீங்கள் சாடுகிறீர்கள். பிறகு, உலகத்திற்கு நீங்கள் வழங்கும் வழிதான் என்ன? கடவுள் நம்பிக்கை இல்லாமல் போனால், வாழ்க்கை, சுவாரஸ்யமற்ற சுழற்சி யாக, இருண்ட நிலைக்கு இட்டு செல்வதாகவே இருக்கும்.

**கிருஷ்ணமூர்த்தி** : நீங்கள் கடவுள் கொள்கையை நம்பினாலும் நம்பாவிட்டாலும், நான் கடவுள் கொள்கையை ஒதுக்கித் தள்ளி னாலும் அல்லது அழித்தாலும், உண்மை நிலை ஒன்று இருக்கிறது. அந்த உண்மை நிலையை, எந்த நம்பிக்கையின் மூலமாகவும் அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில், பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்ற விருப்பத்தின் விளைவாக தோன்றுவது தான் நம்பிக்கை. அச்சம் கொண்டிருக்கும் மனம், எதையாவது சார்ந்திருக்க வேண்டுகிறது. கணந் தோறும் மாறும் உலக வாழ்வைப் பார்க்கும் கவலை தோய்ந்த மனம், ஆறுதல் பெற கடவுள் என்ற கொள்கையை உருவாக்குகிறது. ஆனால், கடவுளைப் பற்றிய கொள்கையாகக் கடவுள் இல்லை. கடவுள், மனதால் முன்நிறுத்தப் படக்கூடிய விஷயமல்ல. கடவுளை,

☞ 2

## நம்பிக்கை, புரிதலை தடை செய்கிறது

நம்பிக்கை இல்லையெனில் நமக்கு என்ன நடக்கும்? என்ன நடக்குமோ நமக்கு என்று நாம் அச்சம் கொள்ள மாட்டோமா? கடவுள் நம்பிக்கை, கம்யூனிசம், சோஷியலிஸம், ஏகாதிபத்தியம், கொள்கை, மதரீதி கொள்கை அல்லது நாம் தளைப்படுத்தப்பட்ட கொள்கை ஆகிய இவற்றை சார்ந்த செயல்முறை இல்லாவிடில் நாம் கதியற்று ஆகிவிட வேண்டும், இல்லையா?

நாம் நம்பிக்கையை ஏற்றுகொள்வது நம் ஏதுமற்ற நிலையின் பயத்தை மறைப்பதற்கல்லவா? ஒரு கிண்ணம் காலியாக உள்ளபோது தான் உபயோகப்படும். நம்பிக்கைகளாலும், கோட்பாடுகளாலும், பிடிவாதங்களாலும் மேற்கோள்களாலும் நிரம்பி உள்ள மனம் படைப் பாற்றல் அற்றது. நாம் ஆர்வத்துடன், பேராசையுடன் நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு காலித்தன்மையின் பயம், மாற்றமின்மையின் பயம், வாழ்க்கையில் வெற்றி காணாததால் பயம், சாதனை செய்யாததால் பயம், எதுவும் இல்லாமல் இருப்பதால் பயம், எதுவும் ஆகாமலிருப்பதால் பயம் ஆகிய இத்தகைய பயங்களிலிருந்து தப்பிப்பது நிச்சயம் ஒரு காரணம் அல்லவா?

நம்பிக்கையை ஏற்பதால் நாம் நம்மை புரிந்து கொள்கிறோமா? மாறாக, மத ரீதியாக அல்லது அரசியல் ரீதியான நம்பிக்கை நம்மை நாம் புரிந்து கொள்வதற்கு தடையாக இருப்பது வெளிப்படை. நம்பிக்கையின் மூலம் நம்மை பார்க்க இயலுமா? நம்முடைய பல்வேறு நம்பிக்கைகளை நாம் நீக்கிவிட்டால் காண்பதற்கு ஏதேனும் உள்ளதா? தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் நம்பிக்கைகள் மனதில் இல்லாவிடில் பின்பு அம் மனதால் தன்னை உள்ளவாறு தொடர்புகளற்று பார்க்க இயலும். நிச்சயம் அப்போது ஒருவர் தன்னை அறிவதற்கான தொடக்கம் ஏற்படும்.

The Book of Life பிப்ரவரி 14

மனதால் ஒருகாலும் அறிந்துகொள்ள முடியாது.

கடவுள் நம்பிக்கை, சமுதாயத்தில் பிரிவினையைத் தோற்றுவிக்கிறது. உங்களுக்கு கடவுள் முக்கியமல்ல; உங்கள் கடவுள் நம்பிக்கைதான், கடவுளை விட உங்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது. இதனால் கடவுள் நம்பிக்கை, மக்களிடையே ஒற்றுமையை குலைக்கிறது. ஒருவருக்கு எதிராக ஒருவரைச் செயல்பட வைக்கிறது. உங்கள் நம்பிக்கையால், நீங்கள் உலகை இருளடையச் செய்யவில்லையா? உங்கள் கணக்கிலடங்கா நம்பிக்கைகளைப் பாருங்கள்! கடவுளின் பெயரால், நீங்கள் கொலை செய்வீர்கள், இல்லையா? சில நொடிப்பொழுதில், ஆயிரக்கணக்கான மக்களை அணுகுண்டு வீசி கொல்லும் மனிதனுக்கும், கடவுள் நம்பிக்கை இருக்கிறது. மேம்பட்ட உலகத்தை உருவாக்க நினைக்கும், கடவுள் நம்பிக்கை இல்லாத, கம்யூனிஸ்ட்டு களும், மக்களை அழிக்கிறார்கள். ஆக, கடவுள் நம்பிக்கை கொண்ட வரும், அந்த நம்பிக்கை இல்லாத வரும், பெரியதாக ஒன்றும் வித்தியாசப்படவில்லை, அல்லவா? ஆக, ஆஸ்திகர், நாத்திகர் இருவருமே, அழிவைத் தேடித் தருகிறார்கள். மக்களை இன்னலுக்கு ஆளாக்குகிறார்கள். கிருத்துவர்களும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள், ஹிந்துக்களும் கடவுள் நம்பிக்கையுடையவர்கள். ஆனாலும், அவர்கள் இரு துருவங்களாகப் பிரிந்து இருக்கிறார்கள். ஒருவரோடொருவர் சண்டை சச்சரவுகள் செய்து கொண்டும், பேராசையால் ஒருவரையொருவர் அழித்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனாலும், இரு பிரிவினருமே கடவுளில் நம்பிக்கை வைத்திருப்பதாகப் பறைசாற்றிக் கொள்கிறார்கள். கடவுள் இல்லையா? கடவுள், நம் மனதின் முன்நிறுத்தலா?

உண்மை நிலைக்கு, நீங்கள் எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் சரியே. உண்மை நிலை என்பது, மனதிற்கு அப்பாற்பட்டது. மனம், தன்னைப் பற்றி புரிந்து கொள்ளாவிட்டால், உண்மை நிலையைக் காண முடியாது. மனம் அமைதியாகவும் சலனமற்றும் இல்லாவிட்டால், அசாதாரணமான உண்மை நிலையைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியாது.

### *உண்மைகளைக் காணும் மனம் ஆழ்ந்த அமைதி பெறுகிறது*

கடவுள் நம்பிக்கை, மனதை, அமைதியாக்குவதில்லை. மாறாக, நம்பிக்கையானது, மனதை முடமாக்குகிறது, தளைபடுத்துகிறது, சுக்கு நூறாக்குகிறது. பாதுகாப்பிற்காக ஒன்றைச் சார்ந்திருக்கும் அச்சம் கொண்ட மனதிற்கு, மதிப்பேது மில்லை. நம்பிக்கை, சுய பாதுகாப்பாகச் செயல்படுகிறது. நம்பிக்கை மனமறிந்த ஒன்றாக, நிச்சயமாக ஆறுதல் தரும் துணையாக இருக்கிறது. நம்பிக்கை, பிரிவினைக்கு வித்திடுகிறது, மக்களை அழிக்கிறது. இந்த நிலையில் இயங்கும் மனதால், உண்மை நிலையை உணர முடியுமா? தன்னுடைய செயல்பாட்டைப் பார்த்தறிந்த மனம், விழிப்புணர்வு பெற்று, எல்லா நம்பிக்கைகளிலிருந்தும் விடுபட வேண்டாமா? நம்பிக்கையிலிருந்து விடுபடல் என்றால் பயங்களிலிருந்து விடுபடல் என்றும் பொருளாகிறதல்லவா? நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டால், மனம், ஆழ்ந்த அமைதியுடனும் சலனமில்லாமலும், விருப்பு வெறுப்பு களை முன் நிறுத்தாமலும், வேட்கையில்லாமலும், புனித நூல்களின் துணையை நாடாமலும், சாதித்து விடுவோம் என்பது போன்ற நம்பிக்கைகள் அற்றும் இருக்கிறது. அச்சத்தோடு இருக்கும் மனம், உண்மை நிலையை ஒருகாலும் காண முடியாது. மனம், அச்சத்துடன் இருக்கும்போது, நம்பிக்கையை நாடுகிறது. அச்சம் கொண்ட மனம், நம்பிக்கையை, உண்மை நிலை என்று வெளிச்சம் போட்டு முன் நிறுத்துகிறது.

இந்த உண்மைகளைக் காணும் மனம், ஆழ்ந்த அமைதி பெறுகிறது. அமைதியில் மட்டும்தான்,உண்மை நிலை பிரகாசிக்கிறது. நீங்கள், அதை, வாவென்று அழைக்க முடியாது. அதற்கு லஞ்சம் கொடுத்து வரவழைக்க முடியாது. உண்மை நிலையைப் பெற, நீங்கள் செய்யும் தியாகங்கள் எதனாலும் அதைப் பெற முடியாது. எந்த நற்பண்பும், உண்மை நிலையை, உங்களுக்குப் பரிசாகப் பெற்றுத் தர முடியாது. எதையும் எதிர்பார்க்காமலும், எதிலும் நம்பிக்கை வைக்காமலும், மனம் ஆழ்ந்த மோனத்திலிருக்கும்போது மட்டுமே, உண்மை நிலை அந்த மனதிற்கு வரும்.

மார்ச் 1, 1953, மும்பை.

# மூளையின் இயக்கம் – ஒரு பார்வை

**நண்பர்:** கூர்முனைச் சிகரமாய் இருக்கும் பிரமிட், ஒரு முனையில் குவிந்திருப்பது போல, உங்கள் போதனைகளின் நுணுக்க விவரங்களை ஒருமித்துக் கொண்டுவரக் கூடிய ஒரு செயல் எது? நீங்கள் கூறும் நுணுக்கமான விவரங்கள் அனைத்தையும் ஒன்றாக்கி அதை என் செயல்பாடுகள் அனைத்திலும் வியாபித்திருக்கும் ஒன்றாக நான் வடிவமைக்க வேண்டும்.

**கிருஷ்ணமூர்த்தி:** கேட்கப்பட வேண்டிய கேள்வி என்று நான் நினைப்பது எதுவென்றால், உண்மையிலேயே அறிவார்ந்த செவ்விய வாழ்க்கை வாழ்வது எப்படி என்பதே. அறிவார்ந்த, சமநிலையான செயல்திறன் கொண்ட, மற்றவர்களுடன் சுமுகமானத் தொடர்புடைய, குழப்பமற்ற, துயரமற்ற வாழ்க்கை எப்படி வாழ்வது என்பது கேள்வியாக இருக்கிறது. எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளாமல் நாம் எவ்வாறு மிகவும் அறிவார்ந்ததாகவும் ஒழுங்கானதாகவும் உள்ள வாழ்க்கை வாழ்வது? இப்பிரச்சனையை நாம் எப்

பொழுதுமே வெளியிலிருந்துப் பார்ப்பதாகவே தோன்றுகிறது.

**நண்பர்:** இல்லை, உலகப் பிரச்சனைகளாக இருக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளை எப்படி சமாளிப்பது, அவற்றிற்கு எப்படி தீர்வு காண்பது என்று நான் கேட்கவில்லை. அது அபத்தமான கேள்வி! இவ்வுலகம் இருக்கும் நிலையை மாற்றக் கோரவில்லை, அது அதன் நிலையில் இருக்கும் போதே, நான் எப்படி சரியான முறையில் வாழ்வது என்பதே நான் வினவுவது. உலகை வேறு எந்த வடிவமைப்பிலும் என் விருப்பத்திற் கேற்ப மாற்றமுடியாது. உலகத்தின் நிலைமை எதுவாக உள்ளதோ அதில் நான் வாழ்ந்தாக வேண்டும் - இச் சந்தர்ப்பத்தில் நான் பிரச்சனை களுக்கு தீர்வும் காணவேண்டும். தர்மத்தின் வழிச் செல்லும் வாழ்க்கை யாக எப்படி என் வாழ்க்கையை அமைத்துக்கொள்வது என்று கேட்கி றேன். நான் குறிப்பிட்ட தர்மம், வெளியிலிருந்து திணிக்கப்பட்டது அல்ல, எந்த போதனையையும் ஒத்திருப்பதல்ல, எண்ணங்களால் உருவாக்கப்பட்டதும் அல்ல.

**கிருஷ்ணமூர்த்தி:** மேன்மை யான அறிவுத்திறம், மாசற்ற எளிவந்த தன்மை, அன்பு ஆகியவற்றை உள்ளடக்கிய அருளாசி பெற்றவராக உடனடியாக, திடுமென உங்களை நீங்கள் பார்க்கவேண்டும் என்ற அர்த்தத்திலா சொல்கிறீர்கள்? உங்களின் கடந்த காலமோ நிகழ் காலமோ இல்லாத நிலையில் அப்போது நீங்கள் உங்களைக் காண்கிறீர்கள் - காலத்தின் தாக்கம் இல்லாத அன்பு நிலையில் நீங்கள் செயல்பட வேண்டும் என்றா சொல்கிறீர்கள்?

**நண்பர்:** ஆமாம், அதுவேதான். மிகவும் சரியாகச் சொன்னீர்கள்.

**கிருஷ்ணமூர்த்தி:** சாதனை, வெற்றி அல்லது தோல்வி போன்ற வற்றோடு தொடர்பு இல்லாத நிலை அது. வாழ்க்கை நடத்துவதற்கு கட்டாயம் ஒரே ஒரு வழி தான் இருக்கக்கூடும்: அந்த வழி எது?

**நண்பர்:** அதுதான் என் கேள்வி.

**கிருஷ்ணமூர்த்தி:** ஆரம்பமும் முடிவும் இல்லாததும் விருப்பத்தால் ஒளி ஏற்றப்படாததும் உங்களுக்கோ அல்லது மற்றவருக்கோ சொந்த மில்லாததுமாகிய அந்த ஒளியை நீங்கள் உங்களுக்குள் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய உள்முக வொளி உங்களுக்குள் இருக்கும் போது, நீங்கள் எதைச் செய்தாலும் அது எப்பொழுதும் சரியானதாகவும் உண்மையானதாகவும் இருக்கும்.

**நண்பர்:** அந்த ஒளியை இப்பொழுதே பெறுவது எப்படி? போராட்டம், தேடுதல், ஏக்கம், விசாரணை ஆகியவைகளைச் செய்யாமல், இப்பொழுதே அதைப் பெறுவது எப்படி?

## *மூளையின் ஒழுங்கீனத்தினால் போராட்டங்கள் தோன்றுகின்றன*

**கிருஷ்ணமூர்த்தி:** கடந்த கால நினைவுகளுக்கு முழுவதுமாய் இறந்துபட்டால் மட்டுமே அதைப் பெற முடியும். முழுமையான ஒழுங்கில் மூளை செயல்பட்டால் மட்டுமே கடந்த காலம் இல்லாமல் இருத்தல் இயலும். ஒழுங்கீனத்தை மூளையால் சகித்துக் கொள்ள முடியாது. ஒழுங்கீனத்தில் மூளை செயல்பட்டால், அதன் செயல் பாடுகள் அனைத்துமே முரண்பட்ட தாகவும், குழப்பமானதாகவும் பரிதாப கரமானதாகவும் இருக்கும். அதன் செயல்களால் அதனுள்ளும் அதைச் சுற்றியும் விஷமத்தனம் பரவும். மூளையின் ஒழுங்கு, எண்ணங்கள் வகுத்தத் திட்டமாக இல்லை; ஒரு கொள்கைக்கோ அதிகாரத்திற்கோ அல்லது நல்லது என கற்பனைச் செய்யப்பட்ட ஒன்றிற்கோ கீழ்ப்படி தல் என்பதால் மூளையில் ஒழுங்கு தோன்றுவதில்லை.

மூளையின் ஒழுங்கீனத்தால் போராட்டங்கள் தோன்றுகின்றன; பிறகு, இந்த ஒழுங்கீனத்திலிருந்துத் தப்பித்துக்கொள்ள, எண்ணங்கள் பல்வேறு விதமான எதிர்ப்புச்சக்தி களை வளர்க்கின்றன; மனப் போராட்டங்களைத் தடுத்து நிறுத்து வதற்காக மத சார்புடைய வழிகளை யும் மற்ற பிற வழிகளையும் எண்ணங்கள் தோற்றுவிக்கின்றன.

**நண்பர்:** தன்னுள்ளே ஒழுங் கற்றதாயும் முரண்பட்டதாயும் இருக் கும் மூளையில் ஒழுங்கை எப்படிக் கொண்டு வருவது?

**கிருஷ்ணமூர்த்தி:** நாள் பூராவும் தொடர்ந்து விழிப்புடன் நம் செயல் பாட்டைக் கவனித்து, அதன் பிறகு, உறங்கப் போகுமுன், நாட்பொழுதில் நாம் செய்த எல்லாக் காரியங் களையும் ஒழுங்குப்படுத்தினால், மூளைக்கு ஒழுங்கைக் கொண்டுவர முடியும். இவ்வகையில் செயல்படு வதால், மூளை, ஒழுங்கீனத்தில் உறங்கப் போவதில்லை. இப்படிச் சொல்வது, நிஜத்தில் அதனுள்ளும் அதைச் சுற்றியும் ஒழுங்கீனம் இருக்கும்போது, மூளை தன்வசியம் செய்துக்கொண்டு, ஒழுங்கில் உறங்கச் செல்கிறது என்று பொருள் படாது, நாட்பொழுதில் ஒழுங்கு இருக்கவேண்டும்; உறங்கப் போகு முன், அன்றைய செயல்பாட்டைத் தொகுப்பது என்பது ஒத்திசைவோடு நாளை முடிவிற்குக் கொண்டு வருவது என்பதாகும். காலைப் பொழுதில் கணக்கு விவரங்களை ஒழுங்காக வைத்துக்கொண்டு வரும் ஒருவர் அன்று மாலை, கணக்கு விபரங்களைச் சரிகட்டி ஒழுங்காக அட்டவணைப்படுத்துவதைப் போன்றதே, அன்றைய நிகழ்ச்சிகளை உறங்கப்போகுமுன் நாம் ஒழுங்குப் படுத்துவது. அடுத்த நாளை, புத்துணர்வுடன் தொடங்க, அன்றைய கணக்கு விபரங்களைச் சமன் செய்து பட்டியல் போடுகிறார். தூக்கத்தில், மனம், அமைதியாகவும் சுமை களற்றும், கவலை, குழப்பம், பயம், எதிர்பார்ப்பு போன்றவைகளால் அவதியுறாமலும் இருக்கவேண்டி, கணக்கு விபரங்களை சமன் செய்து பட்டியல் போடுகிறார். அவர் விழித்தெழும்போது, ஒளி சுடர் விடு கிறது. எண்ணத்தின் விளைவாகவோ இன்பத்தின் விளைவாகவோ, அந்த

ஒளி மிளிரவில்லை. அறிவுத் திறனாகவும் அன்பாகவும் அந்த ஒளி இருக்கிறது. நெறிமுறைகளின்படி நாம் வளர்க்கப்பட்டோம்.

அந்த நெறிகளின் ஒழுங்கின்மையை இல்லாதொழிப்பதுதான் அந்த ஒளி.

**நண்பர்:** உடனே சீக்கிரமாக நான் அந்த ஒளியைப் பெறமுடியுமா? நான் முதலில் கேட்ட கேள்வியே அதுதான். சற்றே வித்தியாசமாக அதைக் கேட்டிருந்தேன்.

**கிருஷ்ணமூர்த்தி:** 'நான், எனது' என்ற உணர்வு உங்களுக்கு இல்லாதிருந்தால் உடனே சீக்கிரமாக உங்களால் அதைப் பெற முடியும். 'நான், எனது' முடிவுறவேண்டும் என்பதை அதுவே உணர்ந்துப் பார்க்கும் பொழுது, 'நான், எனது' என்ற உணர்வு முடிவுறுகிறது; புரிந்துக்கொள்ளல் என்ற ஒளியாக இருப்பது பார்த்தல்.

Urgency of Change Ch. 29

# ஆன்மீக உணர்வுள்ள மனம்

நான் இம்மாலைப் பொழுதில் மதத்தைப் பற்றி ஆராய விரும்புகிறேன். ஏனெனில் நாம் இந்த இடத்தை விட்டு வெளியே செல்லும்போது மிகத் தெளிவான உறுதியான ஆன்மீக உணர்வுள்ள மனதோடு சென்றோமானால் நமது பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியுமென்று நினைக்கிறேன். ஆன்மீகம் என்பது எல்லாவற்றையும் தன்னுள் கொண்டது. அது தனிப்பட்ட ஒன்று அல்ல. ஆன்மீக உணர்வுள்ள ஒரு மனதிற்கு தேச உரிமை என்று ஒன்று கிடையாது. அது தேச வரம்புகளுக் குட்பட்டதன்று. அது தனிப்பட்ட முறையில் அமைக்கப்பட்ட எந்த ஒரு கூட்டத்திற்கும் சொந்தமானதன்று. அது பத்தாயிரம் ஆண்டுகளாக செய்த பிரச்சாரத்தினாலோ, அன்றி இரண்டாயிரம் வருடங்களாக செய்யும் பிரச்சாரத்தினாலோ ஏற்பட்ட விளைவு அல்ல. எந்தவித கொள்கையோ, நம்பிக்கையோ அதற்கு கிடையாது. அது உண்மையில் மட்டுமே நகர்ந்து செல்லும் ஒரு மனமாகும். அது வெளிப்படையான மேலெழுந்தவாரியான எண்ணம், படிப்பறிவுள்ள எண்ணம், இவை மட்டுமின்றி படிப்பறிவேயில்லாத எண்ணம், நாமே அறியாத ஆழ்மனதிலிருக்கும் எண்ணம், நோக்கங்கள் என்று எண்ணத்தின் முழு தன்மையையும் அறிந்து கொள்ளும் ஒரு மனமாகும். ஓர் மனம் ஒரு விஷயத்தை முழுமையாக விசாரணை செய்து அவ்விசாரணையின் மூலமாகப் பொய்யானதைக் கண்டு உணர்ந்து, பின்னர் அதை பொய்யென நிராகரிக்கும் போது அத்தகைய பரிபூரணமான நிராகரிப்பே அம்மனதில் ஆழ்நிலையிலுள்ளதும், புரட்சிகரமானதுமான ஒரு புதிய தன்மையை தோற்றுவிக்கும். ஆனால் நம்மில் பெரும்பாலோருக்கு மதம் என்பது சொல்லளவிலும், சின்னங்கள் அளவிலுமட்டுமேயல்லாமல் நாம் பழக்கப்படுத்தப்பட்டு கட்டுண்டதின் (conditioning) விளைவாகவே இருக்கின்றது. எல்லாவித மூட நம்பிக்கைகள், நம்பிக்கைகள், கொள்கைகள், இந்து மதத்தின் பரம்பரை பழக்க வழக்கங்களனைத்தையும் சொல்லி, 'நீங்கள் ஒரு இந்து' என்று உங்களுக்கு இளம் பிராயத்திலிருந்தே சொல்லி வந்ததாலும், உங்களுக்கு கூறியவை எல்லாவற்றையுமே நீங்கள் ஏற்றுகொண்டு விட்டதாலுமே நீங்கள் ஒரு இந்துவாக இருக்கின்றீர்கள். அவ்வண்ணமே தான், நீங்கள் ஒரு முஸ்லீம் அல்லது கிறித்துவராக அல்லது உங்களுக்குப் பிரியமான எதுவாக இருப்பினும் நடக்கின்றது. ஒரு கம்யூனிஸவாதி தன்னுடைய இளம் பிராயத்திலேயே கடவுள் இல்லை என்று ஏற்றுக்கொள்வதைப் போன்று நீங்களும் கடவுள் இருப்பதாக ஏற்றுக் கொள்கிறீர்கள். உங்களுக்கும், கடவுளை நிராகரிக்கும் அந்த நபருக்கும் அதிக வித்தியாசமில்லை. இருவரின் நிலைகளுமே பழக்கப்படுத்தப்பட்டு கட்டுண்ட மனதின் விளைவுகள் தாம். நான் உங்களைச் சாடவில்லை. நீங்கள் உங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நீங்கள் எதிர்க்கவும் தேவையில்லை. நாம் உண்மைகளையே கையாளுகின்றோம். ஓர் உண்மையை எதிர்ப்பதென்பது விவேகமற்றது. அது அர்த்தமற்றது. இவ்வுலகமே குழப்பங்கள் நிறைந்ததாயிருக்கின்றது. நீங்களே முனைந்தாலும், அரசியல்வாதிகளாலும்கூட இப்போதிருக்கின்ற நிலையை விட இந்த உலகத்தை மேலும் குழப்பங்கள் நிறைந்ததாக்க உங்களால் முடியாது. இவ்வளவு குழப்பங்கள் நிறைந்த நிலையைச் சீர்ப்படுத்துவதற்கு அதிகூர்மையான, தெளிவான, திடமான, விவேகமுள்ள ஒரு மனம் தேவை. ஆழ்நோக்காலன்றி வேறு எந்த வகையிலும் அத்தகைய மனம் தோன்றும் என்று நான் எண்ணவில்லை.

உங்களுடைய மனதின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கவனியுங்கள் – இங்கு பேசுபவர் கூறும் சொற்களையோ அல்லது பேசுபவரை அவரோடு ஒத்துக்கொண்டோ அல்லது ஒப்புக் கொள்ளாமலோ வெறுமனே பின்பற்ற வேண்டாம். நீங்கள் பழக்கத்தால் கண்டுண்டிருப்பதை கவனித்தீர்களேயானால், நான் சொல்கிறேன் என்பதற்காக இல்லாமல், அது ஒரு உண்மை என்பதற்காக – அந்த உண்மையை நீங்கள் நோக்கும் பொழுது, அந்த உண்மையை நீங்கள் உணரும் பொழுது, அப்படியே அந்த உண்மையை, அந்தப் பழக்கப்பட்டிருப்பதை கரைக்க உங்களால் முடியும். ஆனால், முதலில் நீங்கள் உங்களுடைய மனம் பழக்கப்படுத்தப்பட்டு கட்டுண்டிருக்கின்றது என்ற உண்மையை உணர வேண்டும். அது, 'நான் ஒரு இந்து' என்று கூறும் போது அது பழக்கத்தால் கட்டுண்டுள்ளது. கடந்த காலத்தாலும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளின் கலாச்சாரங்களினாலும் அது உருவமைக்கபட்டி

ருக்கின்றது. அது ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியின் கிரமத்தின், புராண கிரமங்களின் விளைவே. மற்றவர் களுடைய அனுபவங்களின் விளை வையே நீங்கள் மதங்களாக ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் சமயம் என்று கருதுவது, உங்களுக்கு சொந்த மான உங்களுடைய நேரடியான அனுபவத்தை அல்ல, அது ஏதோ ஒரு புத்தகத்திலோ, அன்றி ஏதோ ஒரு குருவாலோ அல்லது ஏதேனும் ஒரு தத்தவவாதியாலோ உங்களுக்கு கூறப்பட்டவையே. சமயம் என்பது நீங்களே அனுபவிக்கும் விஷயமாக இல்லை. உங்களுடைய மனம் முழுமையாக பழக்கத்தினின்றும் விடுபடும்போது தான் உண்மையில் ஏதாவது உளதா, இல்லையா என்று உங்களால் அனுபவிக்கவோ அல்லது கண்டறியவோ இயலும்.

ஆன்மீக உணர்வுள்ள மனம், பக்கம் 4 – 7.

# நெருக்கடி உன்னுள் இருக்கிறது

நாம் மிகப் பெரிய நெருக் கடியை எதிர்கொண்டுள்ளோம். அதைத் தீர்த்து வைக்க அரசியல் வாதிகளால் ஒருபோதும் முடியாது. விஞ்ஞானிகளாலோ தொழில் துறையாலோ அதற்கு தீர்வு காண முடியாது. அதன் தீர்வு அரசியலிலோ மதங்களிலோ அறிவியல் உலகத் திலோ இல்லை; அது நம் பிரக்ஞை யில், உணர்வு நிலையில் உள்ளது.

*The Network of Thought, Ch.1*

யுத்தங்கள், புரட்சிகள், சீர்திருத் தங்கள், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் கொணர்ந்த வெளிப் படை மாற்றங்கள் மனிதனின் அடிப்படை இயல்பை மாற்றும் முயற்சியில் முற்றிலுமாகத் தோல்வி அடைந்துள்ளன. சமுதாயத்திலும் மாற்றம் ஏற்படவில்லை. கொடூரமான உலகில் வாழும் நாம் ‘போட்டி, மிருகத்தனம் மற்றும் பயத்தின் அடிப்படையில் அமைந்துள்ள இச் சமுதாயம் முடிவிற்கு வருமா?’ என்று நாம் கேள்வி எழுப்பவேண்டும். இதை சிந்தாந்தக் கருத்தாகவோ அல்லது ஒரு எதிர்பார்ப்பாகவோ இல்லாமல் நிதர்சனமாக கேட்க வேண்டும். இச்சீர்கேடுகள் முடிவுற் றால், மனமானது, புத்துணர்ச்சியுடை யதாகவும் கள்ளங்கபடமற்றதாகவும் ஆகி, முற்றிலும் வேறுபட்ட உலகத்தைத் தோற்றுவிக்க முடியும். உலகத்தின் இன்றைய நிலைக்கு நாம் அனைவரும் முழுமையாகப் பொறுப் பாவோம் என்ற முக்கிய கருத்தை நாம் ஒவ்வொருவரும் புரிந்துக்கொண்டால் மட்டுமே புதியதோர் உலகைத் தோற்றுவிக்க முடியும் என்று நான் எண்ணுகிறேன். உலகின் எப் பகுதியில் வாழ்ந்தாலும் எந்த பண்பாட்டைப் பின்பற்றினாலும், உலகின் இந்த நிலைக்கு நாம் முழுப்பொறுப்பாளிகள் என்பதை உணர வேண்டும்.

*அறிந்ததினின்றும் விடுதலை, அத்தியாயம்.1*

யுத்தங்களை முடிவிற்குக் கொண்டு வருவது நம் கையில் தானிருக்கிறது. ஆனால், நாம் அதை உணர்வதாகத் தோன்றவில்லை. நம் செயல்களுக்கான பொறுப்பை உண்மையிலேயே நாம் உணர்ந்து கொண்டோமென்றால், எவ்வளவு சீக்கிரம் இந்த யுத்தங்களுக் கெல்லாம், இந்த தாங்கொணாத துயரங்களுக்கெல்லாம் நம்மால் முற்றுப்புள்ளி வைக்க முடியும்! ஆனால், மூன்று வேளைச் சாப்பாடு, நமக்கானத் தொழில், வங்கிக் கணக்கு என்று நமக்கு இருக்கும் போது நம் சமூகப் பொறுப்பில் நாம் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. ‘தயவு செய்து தொந்தரவு செய்யா தீர்கள், எங்களை தனித்திருக்க விடுங்கள்’ என்று அலட்சியமாய் சொல்கிறோம்.

வாழ்க்கை - அடிப்படைக் கேள்விகள், கேள்வி எண்.10

நண்பர்: என் ஒருவனின் தனிப்பட்ட முயற்சியால் உலகின் கொடூரத்தையும் வன்முறையையும் நிறுத்தி விட முடியாது. மேலும், மக்கள் அனைவரும் மாற்றம் பெறுவது என்றால் வெகு காலம் பிடிக்கும், இல்லையா?

கிருஷ்ணமூர்த்தி: நீங்கள் தான் மற்றவர். உங்கள் கேள்வி, நீங்கள் பெற வேண்டிய உடனடி மாற்றத்தைத் தவிர்ப்பதற்கான உங்களின் விருப்பத்திலிருந்து வெளிப்பட்டது. ‘‘மற்றவர்கள் மாற்றம் பெறாதபோது, நான் மட்டும் மாற்றம் பெற்று என்ன பயன்?’’ என்பது தான் உங்கள் கேள்வியின் உண்மையானப் பொருள். தொலை தூரம் செல்ல, கிட்டத்தில் தொடங்க வேண்டும். உங்களுக்கு மாற்றம் பெறுவதில் விருப்பம் இல்லை; அதுவும் நீங்கள் உயர்ந்த நிலையில் இருந்தால், வாழ்க்கை எப்படி இருக்கிறதோ அப்படியே தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். அதனால் தான் தனி நபரின் மாற்றத்தின் மூலமாக உலகத்தை மாற்றுவதற்கு வெகு காலம் பிடிக்கும் என்று சொல்கிறீர்கள்.

நீங்கள் தான் உலகம்; நீங்கள் தான் பிரச்சனை; பிரச்சனை உங்களிலிருந்து வேறுபட்டதல்ல; உங்களின் பிரதிபலிப்பு தான் உலகம். நீங்கள் மாறும்வரை, உலகம் மாறாது.

*Commentaries on Living, Vol.2, Ch.16*

தனி நபர் மாற்றம் பெற முடியும் என்பதால்தான், நான் தனி நபர்களுடன் உரையாடுகிறேன். உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ள முடியும். ஆகவே தான், கூட்டத்தை விட தனிநபர் முக்கியத்துவம்

பெறுகிறார். எந்தவொரு உண்மையானச் செயலும், எந்தவொரு முக்கியமான முடிவும், விடுதலைக் காணத் தேடுதலும், சத்தியத்தைப் பற்றிய விசாரமும், தெளிவாகப் புரிந்துக் கொண்ட தனிநபர் மூலமாகவே வெளிப்படும்.

*The Collected Works, Vol.11*

முற்றிலும் புரட்சிகரமான மாற்றம் மனிதருள், உங்களுள், கொண்டு வரப்படும்போது, நீங்கள் சமுதாயத்தின் கட்டமைப்பிலும் பண்பிலும் இயல்பாகவே மாற்றத்தைக் கொண்டு வருகிறீர்கள். மாற்றம், வெளிப்புற நடவடிக்கையாகத் துவங்கக் கூடாது; நம் மனதில் துவங்க வேண்டும்.

*Talks with American Students, Ch.1*

நீங்கள் என் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று நான் கோரவில்லை; எனக்கென்று அதிகாரம் எதையும் சூட்டிக் கொள்ளவில்லை. உங்களுக்கு உபதேசிக்க என்னிடம் எதுவுமில்லை - புதிய தத்துவக் கோட்பாடோ, புதிய வழிமுறையோ, சத்தியத்தை அடைய புதிய பாதையோ எதுவும் என்னிடம் இல்லை. நீங்களே உங்களின் குருவாகவும் உங்களின் சீடராகவும் இருத்தல் வேண்டும். மதிப்பிற்குரியதென்றும் தேவையானதென்றும் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்தையும் ஆமோதித்து விடாமல் கேள்விகளை எழுப்பி தீர ஆராய வேண்டும்.

*அறிந்ததினின்றும் விடுதலை, அத்தியாயம். 2*

இப்போது நம்மை நாமே ஆழ்ந்து பார்க்க போகிறோம் - புத்தகத்திலுள்ளதை ஒருவர் விவரிப்பதாகவும், நீங்கள் புத்தகத்தைப் படிப்பதாகவும் இருக்கப் போவதில்லை நம் ஆராய்ச்சி. நம் மனதின் மிகவும் இரகசியமான மூலைகளுக்குச் சென்று உள்ளதைக் கண்டுபிடிக்கும் பயணமாக நம் ஆராய்ச்சி இருக்கப் போகிறது. இத்தகைய பயணம் மேற்கொள்ள, நாம் பாரங்களைச் சுமக்காமல் லேசாக பயணிக்க வேண்டும். தீர்மானங்கள், கருத்துக்கள், வெறுப்பு போன்ற சுமைகளால் நாம் அழுத்தப்படக் கூடாது. உங்களைப் பற்றி நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பதையும் தெரிந்து கொண்டிருப்பவைகளையும் மறந்து விடுங்கள்; எதுவுமே தெரியாது என்பதான நிலையிலிருந்து தான் நாம் துவங்கப் போகிறோம்.

நேற்றிரவு, நல்ல மழை பெய்தது. வானம் இப்போது தெளிவாகிக் கொண்டு வருகிறது; மலர்ச்சியுடன் கூடிய புதிய நாள் இது. இருப்பது இந்த ஒரு நாள் மட்டுமே என்பது போல் இந்த புதிய நாளைச் சந்திப்போம். நேற்றைய ஞாபகங்கள் அனைத்தையும் பின்னால் விட்டுவிட்டு நம்முடைய பயணத்தைத் தொடங்கலாம் - முதல் முறையாக நம்மைப் பற்றி அறிந்துக் கொள்ளத் துவங்குவோம்.

*அறிந்ததினின்றும் விடுதலை, அத்தியாயம். 1*


**Statement about ownership and other particulars of Vasantha Ethal**

**FORM IV**

| | | |
|---|---|---|
| 1. Place of publication | : | Krishnamurti Foundation India, Vasantha Vihar, 124, 125 Greenways Road, Chennai - 600 028 |
| 2. Periodicity of publication | : | Once in four months (February, June and October) |
| 3. Printer's Name | : | N. Subramanian |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Sudarsan Graphics Offset Press, 27, Neelakanda Mehta Street, T. Nagar, Chennai - 600 017 |
| 4. Publisher's Name | : | G. Rajeev |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Krishnamurti Foundation India, Vasantha Vihar, 124, 126 Greenways Road, Chennai - 600 028 |
| 5. Editor's Name | : | K. Krishnamurthy |
| Address | : | Krishnamurti Foundation India, Vasantha Vihar, 124, 126 Greenways Road, Chennai - 600 028 |
| 6. Name and address of individuals who own the newspaper and partners or shareholder sholding more than one per cent of the total capital | : | Krishnamurti Foundation India, Vasantha Vihar, 124, 126 Greenways Road, Chennai - 600 028 |

I, G. Rajeev, hereby declare that the particulars given are true to the best of my knowledge and belief

Sd.
(G. Rajeev)

*Published in February, June & October.*
*Registered with The Registrar of Newspapers for India under No. TNTAM/2006/17823*

Periodical



*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124,126 (Old 64, 65) Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org



*Published by G. Rajeev on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 (Old 64, 65) Greenways Road, Chennai - 600 028.*
*Printed by N. Subramanian at Sudarsan Graphics Offset Press, 27 Neelakanta Mehta Street, T. Nagar, Chennai – 600 017. Editor: K. Krishnamurthy*